# தலைமைப் பண்பு

## குறிப்புச் சட்டகம்

| |
|---|
| முன்னுரை<br>ஊர்த்தலைவர்<br>போட்டியாளர்கள்<br>முதல் போட்டி<br>இரண்டாம் போட்டி<br>மூன்றாம் போட்டி<br>ஊர்த்தலைவரின் முடிவு<br>முடிவுரை |

**முன்னுரை**

தலைமை பண்பு என்பது நம்முடைய நற்செயல்களால் வெளிப்படும் என்பதை பின்வரும் கதையைக் கொண்டு அறியலாம்.

**ஊர்த்தலைவர்**

செந்தூரின் ஊர்த்தலைவர் வேம்பன். அவர் ஊரின் வளர்ச்சிக்காக பல நல்ல திட்டங்களைத் தீட்டினார். அவற்றை நிர்வாகம் செய்ய திறமைசாலி ஒருவரை தேர்ந்தெடுக்க விரும்பினார்.

**போட்டியாளர்கள்**

பாலன், பூவண்ணன் இருவரும் நிர்வாகிப் பதவிக்காக போட்டியிட்டனர். அவர்களுக்கு மூன்று போட்டிகள் கொடுத்து, அவற்றை சிறப்பாக செய்பவரே வெற்றியாளர் என அறிவிக்கப்பட்டது.

**முதல் போட்டி**

மக்களுக்கு பிடித்தவராக இருக்க வேண்டும் என்பதே முதல் போட்டி. இதில் வெற்றி பெற பாலன் ஊர்மக்கள் அனைவருக்கும் அறுசுவை உணவு அளித்தார். பூவண்ணனோ சில திறமைசாலிகளைத் தேர்ந்தெடுத்து தொழில் பயிற்சி அளித்தார்.

**இரண்டாம் போட்டி**

ஊர்மக்களின் பொருளாதாரத்தை முன்னேற்ற வேண்டும் என்பது இரண்டாம் போட்டியாகும். இதற்காக பாலன் தன் செல்வங்களை அனைவருக்கும் பிரித்துக் கொடுத்தார். பூவண்ணனோ தான் தேர்ந்தெடுத்தவர்களுக்கு கல்வியையும், கலைகளையும் கற்றுக் கொடுத்தார்.

**மூன்றாம் போட்டி**

மக்களிடம் பரிவு காட்டவேண்டும் என்பது மூன்றாவது போட்டி. மரத்தடியில் விழுந்து கிடந்த மூதாட்டியை தூக்கிவிட பாலன் உதவவில்லை. பூவண்ணனோ அவரை தூக்கிவிட்டதுடன் களைப்பு நீங்க உணவும் கொடுத்தார்.

**ஊர்த்தலைவரின் முடிவு**

இருவரின் செயல்களையும் ஆராய்ந்த ஊர்த்தலைவர் பூவண்ணனே நிர்வாகியாகத் தகுந்தவர் எனத் தேர்ந்தெடுத்தார்.

**முடிவுரை**

உண்மையான நற்பண்புகளே தலைமை பதவிக்கு தேவை என்பதனை இக்கதை விளக்குகிறது.

**நீதி:** தொலைநோக்குடன் செயல் படுவனே சிறந்த தலைவன்.

# காணாமல் போன பணப்பை

## குறிப்புச் சட்டகம்

முன்னுரை
காணாமல் போன பணப்பை
வணிகனின் அறிவிப்பு
மூதாட்டியின் செயல்
வணிகனின் மன மாற்றம்
அரசனின் தீர்ப்பு
நேர்மைக்கான பரிசு
முடிவுரை

**முன்னுரை**

“தீதும் நன்றும் பிறர் தர வாரா” நமக்கு வரும் நன்மையும் தீமையும் அடுத்தவரால் வருவதில்லை அவரவர் செயல்களாலேயே வருகின்றன என்னும் நீதியை உணர்த்தும் கதையை கட்டுரை வடிவில் காண்போம்.

**காணாமல் போன பணப்பை**

வணிகன் ஒருவன் தன்னிடமிருந்த ஆடுகளை விற்று, பை நிறைய பணத்துடன் தன் ஊருக்கு திரும்பிக்கொண்டிருந்தான். வழியில் கவனமில்லாமல் பகல் கனவு கண்டபடி வந்த வணிகனின் பணப்பை தொலைந்து போனது.

**வணிகனின் அறிவிப்பு**

கவலை கொண்ட வணிகன் மறுநாள் அரசனிடம் முறையிட்டான். தன் பணப்பையை எடுத்தவர் திருப்பிக் கொடுத்தால் நாற்பது பணம் சன்மானம் தருவதாக அறிவிக்கச் சொன்னான்.

**மூதாட்டியின் செயல்**

அந்த பணப்பையை ஒரு மூதாட்டி கண்டெடுத்தாள். தான்னிடம் கிடைத்த பையை அப்படியே அரசனிடம் ஒப்படைத்தாள். அரசர் அவளின் நேர்மையை பாராட்டினார்.

**வணிகனின் மன மாற்றம்**

பணப்பையை பெற்று கொண்ட வணிகனின் மனம் மாறியது. தான் சன்மானமாக அறிவித்த தொகையை கொடுக்க அவன் விரும்பவில்லை. எனவே தன்னுடைய பையில் அதிக பணம் இருந்ததாகவும், தற்போது அது குறைந்துள்ளது எனவும் பொய் கூறினான்.

**அரசரின் தீர்ப்பு**

அவன் பொய் கூறுவதை கண்டு கொண்ட அரசர், அவனுக்கு பாடம் புகட்ட எண்ணினார். பணம் குறைந்துள்ள படியால் அந்த பை அவனுடையது கிடையாது என தீர்ப்பு கூறினார். பணப்பையை மூதாட்டியிடமே திருப்பிக் கொடுத்தார்.

**நேர்மைக்கான பரிசு**

மூதாட்டியின் நேர்மைக்கு பணப்பை பரிசாக கிடைத்தது. நேர்மையின்றி நடந்து கொண்ட வணிகன் பணத்தை இழந்ததுடன் மற்றவரின் கேலிக்கும் ஆளானான்.

**முடிவுரை**

நேர்மையே சிறந்த செல்வம் என்பதனை இக்கதை மூலம் அறியலாம்.